**Copy of Deposition**
**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 09/2021**
**Prosecution Witness**:1

| Name | சண்முகம் (PW1) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st **day of July 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(A1,A2 present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது வடுகனூரில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி பரமேஷ்வரி எனது மனைவி ஆவார். ஆஜரில் உள்ள எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் தான் சம்பவத்தின்போது என்னை அடித்தார்கள். 20.10.2020ம் தேதியன்று நான் எனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்காக வேலப்பம்பாளையத்தில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு அன்று மாலை 04.45 மணிக்கு சென்றேன். தாமோதரன் மற்றும் பழனிசாமி என்னை வழிமறித்து தாயோலி, கண்டாரோலிபையன் என்ற தகாத வார்த்தைகளால் என்னை திட்டினார்கள். நான் அவர்கள் இருவரிடமும் எதற்காக என்னை திட்டுகிறீர்கள் என்று கேட்டேன். அந்த சமயத்தில் எனக்கு மிகுந்த அவமானம் ஆகிவிட்டது. முதலில் எதிரி பழனிசாமி ஒரு செம்மங்குச்சியால் எனது உடலில் தொடை பகுதியில் அடித்தார். எதற்காக என்னை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி தாமோதரன் அதே செம்மங்குச்சியால் என்னை அடித்தார். அருகில் இருந்த சக்திவேல் மற்றும் கார்த்திகேயன் எங்களை விலக்கிவிட்டார்கள். எதிரிகள் இருவரும் என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார்கள். எதிரிகள் இருவரும் சம்பவ இடத்திலேயே அந்த தடியை போட்டுவிட்டு போய்விட்டார்கள். நான் சம்பவம் பற்றி எனது மனைவி பரமேஷ்வரிக்கு தகவல் கொடுத்தேன். சம்பவ இடத்திற்கு எனது மனைவி சாட்சி பரமேஷ்வரி வந்து ஒரு ஆம்னி வேன் மூலம் என்னை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்.

சம்பவத்திற்கு அடுத்தநாள் மலையம்பாளையம் போலீசார் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு வந்தார்கள். நான் அவர்களிடம் புகார் வாக்குமூலம்கொடுத்தேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்ய கோரப்பட்டது. **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள செம்மங்குச்சியால் தான் எதிரிகள் இருவரும் சம்பவத்தின்போது என்னை அடித்தார்கள். **அந்த செம்மங்குச்சி சா.பொ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

sd/(G.Pandiarajan)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 09/2021**
**Prosecution Witness**:2

| | | | |
|---|---|---|---|
| Name | பரமேஷ்வரி (PW2) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st **day of July 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(A1,A2 present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது வடுகனூரில் குடியிருந்து கொண்டு விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சண்முகம் எனது கணவர் ஆவார். ஆஜரில் உள்ள எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் நான்கரை வருடங்களுக்கு முன்பு மாலை 04.30 மணிக் குஎனது கணவர் அ.சா.1 சண்முகம் அவரது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்காக வேலப்பம்பாளையத்தில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு சென்றார். எனது கணவர் அ.சா.1 சண்முகத்தை எதிரிகள் வழிமறித்து கெட்ட வார்த்தையால் திட்டி ஒரு செம்மங்குச்சியால் எனது கணவர் அ.சா.1 சண்முகத்தை அடித்துவிட்டார்கள். அருகில் இருந்தவர்கள் எனக்கு தகவல் சொன்னதன் பேரில் நான் சம்பவ இடம் வந்து எனது கணவர் அ.சா.1 சண்முகத்தை ஒரு ஆம்னிவேன் மூலம் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு எனது கணவரைகொண்டுபோய் சேர்த்தேன். ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு மலையம்பாளையம் போலீசார் வந்து எனது கணவர் அ.சா.1 சண்முகத்தை விசாரிக்கும்போது அவர் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார். அதன் பேரில் என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

சாட்சிகள் சக்திவேல் மற்றும் கார்த்திகேயன் இருவரும் வடுகனூரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரி தாமோதரன் என்பவர் வெள்ளோட்டம்பரப்பை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி பழனிசாமி என்பவர் ஆயப்பரப்பு, பாப்பாவலசை சேர்ந்தவர்

என்றால் சரிதான். எதிரிகளுக்கும் எங்களுக்கும் தோட்டப்பிரச்சனையோ, பொலி பிரச்சனையோ எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் எங்களுக்கும் பணம்கொடுக்கல் வாங்கல் பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். சண்முகத்திற்கும் எதிரிகளுக்கும் இடையே என்ன முன்விரோதம் என்றால் முன்விரோதம் எதுவும் கிடையாது. எதிரிகளுக்கும் அ.சா.1 சண்முகத்திற்கும் பணம்கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்றும், அதனால் அ.சா.1 கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 சண்முகத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

sd/(G.Pandiarajan)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.